## ANANTHA ACADEMY BATTICALOA.

## BIOLOGY

### UNIT – 02- **Chemical and cellular basis of life**

# QUICK REVISION & PRACTICE MODEL QUESTIONS- XIII

**நேரம் - 120 நிமிடங்கள்**

**1.**பின்வரும் எந்தப் புன்னங்கம் புரதங்களின் தொகுப்பில் நேரடியாகத் தொடர்பு கொண்டதாகும்

**1.**பச்சையுருவம் 2.வெள்ளுருவம் 3.வித்துருமணி 4.இறைபோசோம் 5.இழைமணி

**2.**பின்வருவனவற்றுள் முதலுருவின் கூறு அல்லாதது

**1.**கரு 2.இழைமணி 3.கலச்சாறு 4.இறைபோசோம் 5.கொல்கியுடல்

3.பிழையான கூற்றைத் தெரிந்தெடுக்க.

1.ஒரு அங்கியின் முதலுரு மற்றைய அங்கியின் முதலுருவுடன் சர்வசமமானதாகும்

2.உயிர்ப்பான அனுசேபத்தைக் காட்டும் கலத்தின் முதலுரு உயர் சதவீதமான நீரைக் கொண்டிருக்கும்

3.முதலுரு ஆக்கப்பட்டிருக்கும் இரசாயன மூலகங்கள் அனைத்தும் உயிரற்ற சடப்பொருட்களில் காணப்படும்

4.முதலுருவானது கனியுப்பு அயன்களைக் கொண்டிருக்கலாம்

5.ஒரு கலத்தின் முதலுருவில் தொழிற்பிரிவு காணப்படும்

4.பின்வருவனவற்றுள் உயர் தாவரங்கள் தொடர்பாக பொதுமைப்பாடாக்குவது நியாயமாகவிருப்பது எதில்/எவற்றில்

A.கட்டமைப்பின் அலகு கலமாகும் B.தொழிலின் அலகு கலம் C.ஒரு கலத்தின் கட்டமைப்பு அதன் தொழிற்பாட்டு டன் நெருங்கிய தொடர்புடையது. D.முன்பிருக்கும் கலங்களிலிருந்து புதுக்கலங்கள் தோன்றும்

E.ஒவ்வொரு கலமும் தனியொரு கருவைக் கொண்டிருக்கும்

**5.**பின்வருவனவற்றுள் எது அதன் ஒரு அலகு உலர்நிறைப்பொருளில் மிகக்குறைந்தளவு புரதத்தைக் கொண்டது

**1.**முதலுருஇணைப்புக்கள் 2.கலச்சுவர் 3.பச்சையுருமணி 4.கரு 5.இறைபோசோம்

**6.**பின்வருவனவற்றுள் எவை நீருடன் கொதிக்க வைக்கும்போது நீருக்கு ஊதா மஞ்சள்,ஆரஞ்சு அல்லது இளஞ்சிவப்பு நிறத்தைக் கொடுக்கும்

**A.**பீற்றூட் B.*Rhoeo* இலை C.பழுத்தவாழைப்பழத்தோல் D.கரட் E.பழுத்த மிளகாய்ப்பழம்

**7.**பின்வருவனவற்றுள் எதை அல்லது எவற்றைப் பெற்றிருப்பதால் அகத்தோல் மேற்றோலை ஒத்திருக்கின்றது

A.உயிருள்ள கலங்கள் B.நீள்சதுர அல்லது பீப்பா போன்ற கலங்கள் Cகியூட்டினுடைய கலங்கள்

D.கலஇடைவெளிகள் இல்லாது இறுக்கமாக அடுக்கப்பட்ட கலங்கள்

E.ஆரைக்குரிய சுவரில் தடிப்படைந்த கலங்கள்

8.பின்வரும் இழையம் அல்லது இழையங்களில் எவை சவ்ரனினால் சிவப்பாகச் சாயமூட்டப்படும்

A.மேற்றோல் B.ஒட்டுக்கலவிழையம் C.வல்லுருக்கலவிழையம் D.காழ் E.உரியம்

9.பின்வருவனவற்றுள் எவை முதலுருவுக்குரியன எனக் கருதப்படலாம்

A.அகமுதலுருச்சிறுவலை B.கலச்சுவர் C.இறைபோசோம் D.உருமணி E.குழிக்கல்லு

10.பின்வருவனவற்றில் எது பக்ரிரியாக்களில் காணப்படுவதில்லை.



MR.SUGU

1.கலச்சுவர் 2.இறைபோசோம் 3.சவுக்குமுளை 4.இழைமணி 5.ஒளித்தொகுப்பு நிறப்பொருட்கள்

11.இறைபோசோம்கள்

1.மூன்று உபஅலகுடையவை 2.அழுத்தமுதலுருச் சிறுவலையின் மீது காணப்படும் 3.புரதத் தொகுப்புடன் தொடர்பு டையது 4.தொகுக்கப்பட்ட புரதங்களைப் பொதியாக்க உதவும் 5.கருவினுள் தொழில் எதனையும் புரிவதில்லை

12.இழைமணிகளைப் பற்றிய பிழையான கூற்று

1.அவை ATP தொகுப்பு நடைபெறும் பிரதான இடங்களாகும் 2.சித்திரிக்கமில வட்ட நொதியங்களை உள்ளடக்கும் 3.ஒட்சியேற்றப் பொஸ்போரிலேற்றத்தில் பங்குபற்றும் 4.தனிமென்சவ்வால் உருவாக்கப்படும் 5.உடற்தொழில் முயற்சிகளில் ஈடுபடும் கலங்களில் ஏராளம் காணப்படும்

13.அகக்கலவுருச் சிறுவலையானது

1.உருவத்தில் மாறாத ஒரு மாறிலியாகும் 2.புரதங்களைத் தொகுக்கும் 3.முழுவதுமே இறைபோசோமால் மூடப்பட்டது 4.கலவகக் கடத்தல் தொகுதியாக இருக்கும் 5.கலமென்சவ்வுடன் தொடர்பற்றது

14.கலமென்சவ்வின் பெரும்பகுதி உருவாக்கப்படுவது

1.பொசுபோலிப்பிட்டால் 2.பல நியூக்கிளியோரைட்டுக்களால் 3.புரதங்களால் 4.செலுலோசால் 5.பல்சக்கரைட்டால்

15.கலத்தின் கரு,

1.ஒரு தனிமென்சவ்வால் சூழப்பட்டிருக்கும் 2.உயிர்வாழ் அங்கிகள் யாவற்றிலும் காணப்படும் 3.இலத்திரன் நுணுக்குக்காட்டியின் உதவியினால் மட்டுமே கண்ணுக்குப் புலப்படும் 4.கலத்தின் தகவல் மையமாகவும் கட்டுப்பாட்டு மையமாகவும் செயற்படும் 5.DNA அடங்கும் கலத்தின் ஒரேயொரு பகுதியாகும்

16.கலத்தினைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் பிழையானது எது?

1.இயைபாக்க அலகாகும் 2.தொழிலலகாகும் 3.விருத்தியின் அலகாகும் 4.பாரம்பரிய அலகாகும் 5.கட்டமைப்பலகாகும்

17.பின்வருவனவற்றுள் எவை எல்லாவகையான Bacteria களிலும் காணப்படும் என எதிர்பார்ப்பீர்?

A.உறை B.அகவித்தி C.கலமென்சவ்வு D.இறைபோசோம் E.சவுக்குமுளை

18.இழைமணிகள்,பச்சையுருவங்கள் தொடர்பாகத் தவறான கூற்று எது?

1.எல்லா யூக்கரியோட்டாக் கலங்களிலும் இழைமணிகள் காணப்பட்டபோதிலும் ஒளித்தொகுப்பு நடாத்தும் Eukaryota கலங்களில் மாத்திரம் பச்சையுருமணிகள் காணப்படும்

2.இழைமணிகளுள் சக்தி விடுவிக்கப்படுகின்றது எனினும் பச்சையுருமணிகளில் சக்தி பதிக்கப்படுகின்றது

3.இழைமணிகளுள் காபோவைதரேட்டுக்கள் உடைக்கப்படுகின்றது எனினும் பச்சையுருமணிகளுள் காபோவைதரேட்டுத் தொகுப்பு நடைபெறுகின்றது

4.இழைமணிகளுள் $CO_2$ விடுவித்தல் நடைபெறுகின்றதெனினும் பச்சையுருமணிகளுள் $CO_2$ பதித்தல் நடைபெறுகின்றது

5.இழைமணிகளுள் ATP தொகுப்பு நடைபெறுகின்றது எனினும் பச்சையுருமணிகளுள் ATP தொகுப்பு நடைபெறுவதில்லை

19.கலத்தினுள் நொதியங்கள் தொகுக்கப்படும் பிரதான ஸ்தானங்களாவன

1.இலைசோசோம் 2.இறைபோசோம் 3.சிறுமணியற்ற ER 4.நிறமூர்த்தங்கள் 5.இழைமணிகள்

20.இலைசோசோம்கள் சம்பந்தப்படுவது கலத்தகத்தே நிகழும்



MR.SUGU

1.சமிபாட்டுடன் 2.சுவாசத்துடன் 3.சுரத்தலுடன் 4.தொகுப்புடன் 5.கடத்தலுடன்

21.பல அங்கிகளில் குறிப்பிட்ட கலங்கள்

1.பிரியும் சக்தியை இழந்துள்ளன 2.கழித்தல் சக்தியை இழந்துள்ளன

3.சுவாசித்தல் சக்தியை இழந்துள்ளன 4.தூண்டல்களுக்குத் தூண்டற்பேறு விளைவிக்கும் சக்தியை இழந்துள்ளன

5.ஒருசீர் நிலையைப் பேணும் சக்தியை இழந்துள்ளன

22.பின்வருவனவற்றில் எதில் பெக்ரின் ஒரு பிரதான கூறாகக் காணப்படுகின்றது?

1.முதற்கலச்சுவர் 2.துணைக்கலச்சுவர் 3.நடுமென்தட்டு 4.கலமென்சவ்வு 5.முதலுருவிணைப்பு

23.பச்சையுருவங்களின் ஒரு கூறாகக் காணப்படாதபோதிலும் பச்சையுருவங்களின் தொகுப்புக்கு அத்தியாவசியமான ஒரு மூலகம் எது?

1.ஐதரசன் 2.மக்னீசியம் 3.ஒட்சிசன் 4.இரும்பு 5.நைதரசன்

24.பின்வருவனவற்றில் எதன் காரணமாகக் குழிகள் தோன்றுகின்றன

1.குழிப்பிரதேசத்தில் நடுமென்தகட்டுப் பதார்த்தங்கள் படிவுறாமை

2.குழிப்பிரதேசத்தில் முதற்சுவர்ப் பதார்த்தங்கள் படிவுறாமை

3.குழிப்பிரதேசத்தில் துணைச்சுவர்ப் பதார்த்தங்கள் படிவுறாமை

4.குழிப்பிரதேசத்தில் நடுமென்தட்டுப் பதார்த்தங்களும் முதற்சுவர்ப் பதார்த்தங்களும் படிவுறாமை

5.குழிப்பிரதேசத்தில் நடுமென்தகட்டுப் பதார்த்தங்கள், முதற்சுவர்ப் பதார்த்தங்கள், துணைச்சுவர்ப் பதார்த்தங்கள் என்பன படிவுறாமை

25.Prokaryota கலங்கள் யூக்கரியோட்டாக் கலங்கள் இரண்டிலும் காணப்படுவது எது?

1.இறைபோசோம் 2.புன்கருக்கள் 3.பச்சையுருவங்கள் 4..இழைமணிகள் 5.முதலுருவலை

26.காற்றிற் சுவாசத்தின்போது மிக உயிர்ப்பாகக் கருமமாற்றுவது எது?

1.இறைபோசோம் 2.புன்கருக்கள் 3.பச்சையுருவங்கள் 4..இழைமணிகள் 5.முதலுருவலை

27.அகமுதலுருச் சிறுவலை தொடர்பான தவறான கூற்று எது?

1.கருவுடைய சகல கலங்களிலும் இது காணப்படும்

2.அது மென்சவ்வினால் உள்ளடக்கப்பட்ட உள்ளிடங்கள் கொண்ட ஒரு தொகுதியாகும்

3.கலத்தினுள் அது ஒரு கடத்தலுக்குரிய பின்னலை உருவாக்கின்றது

4.அது கருச்சூழியினைப் பிறப்பிக்கும்

5.கருச்சூழியுடன் அது நேர்தொடர்பினைக் கொண்டிருக்கும்

28.இழைமணிகளைப் பற்றிய கூற்றுக்களில் பிழையானது எது?

1.அவை பகற்புச் செய்யும் புன்னங்கமாகும்

2.தம்மகத்திலே அவை புரதத்தொகுப்பைச் செய்கின்றன

3.தமக்குச் சொந்தமான பாரம்பரியப் பொருளை உள்ளடக்குகின்றன

4.சித்திரிக்கமில வட்டம் நிகழ்வதற்கு வேண்டிய ஸ்தானங்களை அவை வழங்குகின்றன

5.பெற்றோரில் இருந்து அவை எச்சங்களுக்குக் கட்தப்படும்

29.நுணுக்குக் காட்டிகள் பற்றிய சரியான கூற்று எது?

1.ஒளிநுணுக்குக் காட்டியின் பிரிவலு மனிதக்கண்ணின் பிரிவலுவிலும் 1000 மடங்கு உயர்ந்ததாகும்

2.இலத்திரன் நுணுக்குக் காட்டியின் பிரிவலு மனிதக்கண்ணின் பிரிவலுவிலும் 10000 மடங்கு உயர்ந்ததாகும்

3.முப்பரிமாணக் கட்டமைப்பை இலத்திரன் நுணுக்குக்காட்டி மூலம் இலகுவாக ஆராய முடிகின்றது



MR.SUGU

4.அலகிடும் இலத்திரன் நுணுக்குக்காட்டி (Scanning Electron Microscope) மூலமே மேற்பரப்புக்குரிய இயல்புகளை மிகச் சிறந்த முறையில் பார்வையிட முடியும்

5.EM படங்களை வெறுங்கண்ணால் நேராகப் பார்க்க முடியும்

30.கலங்களைப் பற்றிய சரியான கூற்று எது?

1.சகல கலங்களும் கருக்கள் உடையவை 2.கலங்கள் அனைத்தும் ஏறத்தாள ஒரே பருமன் உடையவை

3.மேற்பரப்பு / கனவளவு விகிதம் கலத்தின் பருமன் அதிகரிக்கும் போது அதிகரிக்கும்

4.அனைத்திலும் ஆதியான கலவமைப்பு வைரசுக்களில் காணப்படும்

5.கலமென்சவ்வில் புரதங்கள் தொடர்ச்சியான ஒரு படையை உருவாக்குவதில்லை

31.கலமென்சவ்வைப் பற்றிய தவறான கூற்று எது?

1.அது சுவாசத்திற்குரிய வாயுக்களைப் உட்புகவிடும்

2.புறத்தில் பிரசாரணவமுக்கம் அகத்தினிலும் பார்க்க உயர்வாக இருப்பின் நீர் மென்சவ்வினூடாக வெளியேறும்

3.அது நெய்யரிபோற் செயற்பட்டு சகல சிறிய மூலக்கூறுகளையும் ஊடுருவவிடுகின்றது

4.அது புரதங்களினாலும் பொஸ்போலிப்பிட்டுக்களாலும் ஆக்கப்பட்டது

5.அதன் குறுக்காக பதார்த்தங்கள் கடந்து செல்வதில் உயிர்ப்புள்ள செல்லல் முறை முக்கியம் வாய்ந்ததாகும்

32.வழுக்கி ஒன்றை நுணுக்குக்காட்டியின் உயர்வலுவின் கீழ் சோதனையிட வேண்டிய கட்டம் ஏற்பட்டுள்ளது. இதைப் பொறுத்தவரையில் கீழ்க்காணும் படிமுறைகளில் பிழையானது எது?

1.நுணுக்குக்காட்டியின் மண்டலத்தில் மூடித்துண்டு மேல்நோக்கிய நிலையில் வழுக்கியை வைக்கவும்

2.பொருள் மேல் நன்றாக ஒளிபடும் நிலையில் கண்ணாடி நிலையைத் திருப்பி வைக்கவும்

3.நீர் பார்வையிட விரும்பும் பகுதியைத் தாழ்ந்த வலு,நடுத்தரவலுவினால் தேர்ந்தெடுக்கவும்

4.மண்டலத்தில் உள்ள கவ்விகளினால் வழுக்கியின் நிலையை உறுதிப்படுத்தவும்

5.உயர்வலுவைப் பார்வைநிலைக்குத் திருப்பி கண்துண்டின் வழியாக பார்த்த வண்ணம் பரும்படி செப்பமாக்கியால் பொருளைக் குவிவு நிலைக்குக் கொண்டுவரவும்

33.சகல அங்கிகளும் ஒரு கலத்தால் அல்லது பல கலத்தால் உருவாக்கப்படுகின்றன என முதன்முதல் கூறியவர்

1.Robert Hooke 2.Robert Brown 3.Van Leeuwan Hook 4.Theodone Schwann 5.Danielli

34.கிளிசரினால் ஏற்றப்பட்ட மாதிரியொன்றைக் கூட்டு நுணுக்குக்காட்டியூடாகச் சோதிக்கும்போது பின்வரும் கருமங்களுள் எதனைச் செய்தலாகாது?

1.உயர் வலுவைப் பயன்படுத்தும்போது மூடித்துண்டைப் பயன்படுத்தல்

2.பார்வைத் துண்டின் ஊடாகப் பார்க்கும்போது இரு கண்களையும் திறந்து வைத்திருத்தல்

3.ஒளியைப் பொருத்தமான விதத்தில் ஒழுங்குபடுத்தும்போது ஆடி,ஒடுக்கி,கதிராளியின் பிரிமென்தட்டு ஆகியவற்றைப் பயன்படுத்தல்

4.மாதிரிப் பொருளைக் குவியப்படுத்த முன்னர் அதன் மீது விழும் ஒளியின் அளவை ஒழுங்குபடுத்தல்

5.மாதிரிப் பொருளை உயர்வலுவின் கீழ் குவியப்படுத்துவதற்காக பரும்படி செப்பமாக்கியால் நுணுக்குக்காட்டியின் பொது ஒழுங்குபடுத்தலை பயன்படுத்தல்

35.பின்வரும் கலப்புன்னங்கங்களுள் எது அல்லது எவை ATP தொகுப்பை நடாத்தும் இடம் அல்லது இடங்கள்

A.இறைபோசோம் B.கரு C.பச்சையுருவம் D.இழைமணி E.புன்கரு

36.Eukaryota கலமொன்றிலே தொகுக்கப்பட்ட புரதத்தின் தன்மை பற்றிய தகவல் பின்வருவனவற்றில்



MR.SUGU

எதில் குறிப்பிடப்பட்டுள்ளது?

1.இறைபோசோம் 2.அமினோஅமிலம் 3.நிறமூர்த்தம் 4.புன்கரு 5.மையப்பாத்து

37.முதலுரு இணைப்புக்களாவன

1.ஒரு கலத்தின் குழியவுருவுடன் கருவைத் தொடுக்கும் முதலுருப்பட்டிகைகளாகும்

2.ஒரு இழையத்தில் அருகருகே உள்ள கலங்களின் கலச்சுவர்களை இணைக்கும் பதார்த்தங்களாகும்

3.அருகருகே உள்ள கலங்களின் குழியவுருக்களைத் தொடுக்கும் முதலுருப் பட்டிகைகளாகும்

4.இழைமணிகள் போன்ற கலப்புன்னங்கங்களைச் சூழ்ந்துள்ள முதலுருமென்சவ்வாகும்

5.தனிக்கலமொன்றிலுள்ள கலப்புன்னங்கங்கள் அனைத்தையும் ஒன்றாகத் தொடுக்கின்ற முதலுருக் கட்டமைப்புக்களாகும9.பின்வருவனவற்றுள் எது அல்லது எவை கலப்புன்னங்கம் ஆகும்?

A.இழைமணி B.குழிக்கல் C.கொல்கியுடல் D.இறைபோசோம் E.அலிறோன்மணி

38.கொல்கி உபகரணம்

1.நரம்புக்கலங்களில் ஏராளம் காணப்படும் 2.நொதியங்களைத் தொகுக்கின்றன 3.ER உடன் தொடர்பற்றது

4.இழைமணிகளை உற்பத்தி செய்கின்றது 5.கலத்தின் சுரப்புக்களைப் பொட்டலம் செய்கின்றது

39.கலமென்சவ்வைப் பற்றிய தவறான கூற்று எது?

1.விலங்குகளின் கலங்களில் அது புறவெல்லைகளை உருவாக்கும்

2.நரம்புக்கலங்களின் நரம்புக்கணத்தாக்கங்களை கடத்த அது உதவுகின்றது

3.அது அகமுதலுருச்சிறுவலையுடன் தொடர்பற்றது

4.கலங்களுக்குள் பதார்த்தங்கள் உட்புகுவதை ஒழுங்குபடுத்துகின்றன

5.ஏறக்குறைய முற்றிலும் இலிப்பிட்டுக்களால் ஆனது.

**40.**தாவரக் கலங்கள் உயிரின்றிய உள்ளுறையைக் கொண்டுள்ளது.பின்வரும் பதார்த்தங்களுள் உயிரின்றிய உள்ளுறை எனக் கருத முடியாதது?

**1.**மாப்பொருள் சிறுமணிகள் 2.கலம் 3.இனூலின் பளிங்குகள் 4.புரதச் சேமிப்பு 5.பளிங்குகள்

41 – 43 வரையான வினாக்கள் கலமென்சவ்வைப் பற்றிய பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டன

A – அது தொடர்ச்சியாக மாறிக்கொண்டிருக்கும் ஒரு கட்டமைப்பாகும்

B – அது பாகுத்தன்மையுடைய ஒரு திரவமாகும்

C – அதன் மேற்பரப்பில் குறுகிய சங்கிலியுருவுடைய காபோவைதறேட்டுக்கள் உண்டு

D – புரத மூலக்கூறுகளின் நீர் நாட்டமுடைய கூட்டங்களினால் மென்சவ்வின் நுண்துளைகள் உறையிடப்படும்

E – புரத மூலக்கூறுகள் இரு புறங்களிலும் பல்வண்ணமாக அமைந்திருப்பதுடன் மென்சவ்வுக்குக் குறுக்காகவும் அமைந்துள்ளது

41.நீரில் கரையும் தன்மையுடைய பதார்த்தங்கள் கலத்திற்குள் செல்லும் முறையுடன் மேற்கூறிய இயல்புகளுள் எது சம்பந்தப்பட்டதாகும்

1. A 2. B 3. C 4. D 5. E

42.பதார்த்தங்கள் கலத்தினுள் உயிர்ப்பாகக் கொண்டு செல்லப்படும் முறையுடன் மேற்கூறிய இயல்புகளுள் எது சம்பந்தப்பட்டதாகும்

1. A 2. B 3. C 4. D 5. E

43.ஒரு கலம் ஏனைய கலங்களை அடையாளங் காணக் கொண்டுள்ள ஆற்றலுடன் மேற்கூறிய இயல்புகளுள் எது



MR.SUGU

சம்பந்தப்பட்டதாகும்

1. A  2. B  3. C  4. D  5. E

44.கீழ்க்காணும் அமைப்புக்களுள் ஒரு பக்ரீரியாக் கலத்தில் காணப்படாத அமைப்பு எது?

1.நியூக்கிளிக்கமிலம் 2.கலமென்சவ்வு 3.சுவாசநொதியம் 4.இறைபோசோம் 5.இழைமணிகள்

45.கீழ்க்காண்பவற்றில் எது குழியமுதலுரு ஓட்டத்தில் கூடுதலாகச் செயற்படும்

1.சிறுமணியுள்ள ER 2.மழமழப்பான ER 3.முதலுருமென்சவ்வு 4.புன்மையத்தி 5.நுண்ணிழைகள்

46.இலைசோசோம் பற்றித் தவறானது

1.பல நொதியங்களை இவை களஞ்சியப்படுத்துகின்றன

2.கொல்கியிலிருந்து இவை உருவாகும்

3.இவை இரட்டை மென்சவ்வுடைய கட்டமைப்புக்களாகும்

4.புரதத் தொகுப்பில் இவை பங்குபற்றுவதில்லை

5.கலத்தின் தற்கொலைப் பொதிகள் என அழைக்கப்படும்

47.பல கலமுள்ள ஒரு பிராணியின் உடற்கலங்கள் யாவும் அதே மாதிரியான

1.அகச்சூழல்கள் உடையவை 2.பெருக்கல் மாதிரியுடையவை 3.புத்துயிர்ப்பு வல்லமை உடையவை

4.புன்னங்கங்களின் எண்ணிக்கை உடையவை 5.பிறப்புரிமையமைப்புடையவை

48 – 50 வரையான வினாக்கள் பின்வரும் வெங்காயச் செதிலிலையின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டது




48.படத்தில் உயிருள்ளவை எவை?

1. 1,2,5  2. 2,4,6  3. 2,3,5  4. 1,4,6

5. விடை இல்லை

49.Ca பிரதானமாகக் காணப்படுவது

1. 6  2. 2  3. 3  4. 4  5. 5

50.RNA காணப்படுவது

1. 1,2  2. 5,6  3. 1,4  4. 4,5

5. 3,4

MR.SIGU